DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 34/2025 |
| Deposition of witness | : | P W- 8 |
| Name | : | பிரபா |
| Father's /Husband Name | : | ரங்கசாமி |
| Village | : | திருவாரூர் |
| Taluk | : | திருவாரூர் |
| Age | : | 43 |
| Occupation | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 11th day March, 2026.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லுரி மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.07.2023-ம் தேதி அதிகாலை 12.25 மணிக்கு திருவாரூர் மேற்படி அதே மருத்துவமனையில் உதவி மருத்துவராக அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த போது 65 வயது மதிக்கத்தக்க பார்வதி க/பெ வீரய்யன் என்பவர் அவரது கணவர் வீரய்யன் என்பவர் பேரளம் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்த மேல் சிகிச்சைக்கு பரிந்துரை செய்யப்பட்டு மேல் சிக்சைக்காக என்னிடம் அழைத்து வரப்பட்டார். அவரை நான் விசாரித்தபோது அன்று 29.07.2023 ம் தேதி இரவு 08.00 மணியளவில் அவரது வீட்டின் தெரிந்த ஒரு நபரால் மரக்கட்டையால் தாக்கப்பட்டதாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது சுயநினைவுடன் இருந்தார். அவரது இடது தலையின் முன்பகுதியில் 6x2x2 செ.மீ. அளவுடைய கிழிந்த காயம் செங்குத்தாக காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக சிகிச்சை அளித்தேன். மேற்படி நபருக்கு நான் பதிவு செய்த விபத்து பதிவேடு **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காயம்பட்ட நபர் கூறுவது போல் தாக்கப்ப்டு இருந்தால் அவருக்கு இருந்த காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் பதிவு செய்த விபத்து பதிவேட்டில் சம்பவ தேதியில் திருத்தம்

காணப்படுகிறது என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கு எக்ஸ்ரே எடுக்கப்பட்டதா என்றால் அதைப்பற்றி அறுவை சிகிச்சை பிரிவு மருத்துவருக்கு தான் தெரியும். வீட்டு சார்பு மழையில் இடிந்து அதன் மேற்கூறை காயம்பட்ட நபரின் மேல் விழுந்தாலும் கூட காயம் பட்ட நபருக்கு இருந்த காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***
District Munsif -Cum- Judicial Magistrate,
Nannilam.